# இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி சம்மந்தப்பட்ட (சார்ந்த) கேள்விகள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** 2000 ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவ சபைகளின் கூற்று என்னவென்றால், அவருடைய வாழ்வின் இறுதியில், நசரேயனாகிய இயேசு சிலுவை மரணத்தை அடைந்து, சகல மரியாதையோடு அடக்கம், பண்ணப்பட்டு அவர் மூன்றாம் நாளில், உயிரோடு எழுந்தார் என்பதே.

**டாக்டர் கிரேக் யு ஈவான்ஸ்:..**அதற்கான ஆதாரங்கள் உள்ளது, அதற்கான சாத்தியகூறுகள் உள்ளது, என்னை பொறுத்தவரை எல்லா காரியங்களும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது, இவை நிர்பந்தைக்கப்படுவது போல காணப்படுகிறது.

**அறிவிப்பாளர்:** ஆனால் சிலருடைய கருத்து இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்பதாகும், அவர் அங்கு சுயநினைவை இழந்து கல்லறையில் அவர் சரியானார் என்கின்றனர். சில நவீன கால ஞானிகளின் இயேசுவின் சரீரம் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, குப்பையில் தூக்கி எரிப்பட்டது, காட்டு நாய்கள் அதை தின்றதாக கூறுகின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுதலின் தோற்றம் என்பது வெறும் ஒரு கட்டுக்கதை அல்லது பிரம்மை என்கின்றனர் அது உண்மையில், இயேசுவின் வெளிப்பாடு அல்ல என்கின்றனர்.

**டாக்டர் எட்வின் யமவ்ச்சி:...**சரி, ஒருவேளை உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், அதை பற்றி நாம் பேச வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்தவ மார்க்கம் என்ற ஒன்று தோன்றியிருக்காது.

**டாக்டர் கேரி ஹேபெர்மேஸ்:..**நான் பத்து வருடங்கள் இறைநம்பிக்கையற்றவனாக இருந்தேன். எனக்கு, வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்ற கேள்வி இருந்தது. நான் யோசித்திருக்கிறேன், நான் அடக்கம்பன்னப்படும்போது, என் கல்லறையின் மேல் இலைகள் பறக்கும் அவ்வளவுதான. அல்லது ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? எண்ணெய் பொறுத்தவரை, நான் உயிர்த்தெழுதலை பற்றிய ஆராய்ச்சியில் தேறினவன். உங்களுக்கு தெரியுமா? இந்த ஆராய்ச்சியினால் என்ன நடக்கும் என்று நான் யோசித்த நாட்கள் உண்டு. ஆனால் இறுதியான முடிவு என்னவென்றால், அவை என்னை வெளியே கொண்டுவந்தது, நம்பிக்கையற்ற நிலையை மாற்றியது. என்னுடைய, கருத்து வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் உள்ளதென்று எடுத்துரைப்பது உயிர்த்தெழுதல் தான். இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்ததினால் நமக்கு நித்தியத்தின் நிச்சயம் உண்டாகிறது.

**அறிவிப்பாளர்:** உலக மற்றும் கிறிஸ்தவ உபகரணங்களில் இருந்து வரலாற்று ஆதாரங்களின் சோதனைகள் மூலம் புலப்படும் காரியங்கள் என்ன?

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்:...**இயேசுவை இளசுவாகவே இருக்க அனுமதிக்க வேண்டும். அவர் தம்மை குறித்து கூறிட இடமளித்து அவராகவே இருக்க வாய்ப்பளிக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய இஷ்டப்படி வரலாற்றில்

இயேசுவை பற்றி சொல்லப்பட்டவைகளை உங்களுடைய கற்பனை படி மாற்றிக்கொள்வீர்கள். அப்போது நீங்கள் உங்களை போன்ற ஒரு சாதாரண நபராக இயேசுவை காண்பித்திடுவீர்கள்.

**அறிவிப்பாளர்:** இயேசு உண்மையாகவே மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நிருபிக்கும் ஆதாரங்கள் உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்கிறீர்கள்?

**டாக்டர் டேரல் பாக்:...**இயேசு தம்மை குறித்து கூறியது உண்மையென்றால், நாம் அனைவரும் அதை ஏற்றுக்கொள்ள கடமை பட்டிருக்கிறோம், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது அசௌகரியமானதாக இருக்கும்.

**அறிவிப்பாளர்:** இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம் உலக தரம் வாய்ந்த வரலாற்று நிபுணர்கள், இறையியலாளர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சொல்வதை கேளுங்கள்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைய நிகழ்ச்சியின் துவக்கமாக நான், Dr. ஆன்டனி ப்ளூ மற்றும் Dr. கேரி ஹேபெர்மேஸ் இருவருக்கும் இடையே நடந்த விவாதத்தை ஒளிபரப்ப விரும்புகிறேன்.

*********

**ஆன்கர்பெர்க்:** இரண்டு விருந்தினர்கள் நம்மிடையே இருக்கிறார்கள் இருவரும் இந்த தலைப்பில் விவாதத்தை சிறப்பாக நடத்திடுவார்கள்: தலைப்பு இயேசு மரணத்திலிருந்து

உயிர்த்தாரா? அவர்கள் தான்: டாக்டர். ஆன்டனி ப்ளூ, இவரைத்தான் உலகின் முதன்மையான நாத்திக தத்துவ ஞானி என்கின்றனர்; அவர் 23ருக்கும் மேற்ப்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார் அதில் சில ஹமீசின் நம்பிக்கையை பற்றிய தத்துவம், தேவனும் சித்தாந்தமும், கிழக்கத்திய தத்துவம் ஒரு முன்னுரை, நாத்திகத்தின் யூகம் மற்றும் தேவனை பற்றி சித்தாந்த கட்டுரைகள், விடுதலை, சிரஞ்சீவித்துவம் போன்றவை.

இரண்டாவது விருந்தினர் டாக்டர். கேரி ஹேபெர்மேஸ், வரலாற்று நிபுணர் மற்றும் கிறிஸ்தவ சித்தாந்த மேதை எனப்படுபவர், ஆதாரங்களை சேகரிப்பதில் திறமையானவர் என்று பலராலும் போற்றப்படும் நபர், வரலாற்று ஆதாரங்கள், இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற ஆதாரம். கேரி 21 புத்தகங்களை எழுதியிருக்கிறார் அவற்றில் சில வரலாற்று மனிதர் இயேசு: கிறிஸ்துவின் வாழ்க்கைக்கான ஆதிகால ஆதாரங்கள், அற்புதங்களுக்கான தற்காப்பு, மற்றும் தேவன் இருக்கிறார்! என்று எதற்கு நம்பவேண்டும்? சகோதரர்களே, நீங்கள் எங்களோடிருப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி.

சரி டாக்டர். ஹேபெர்மேஸ், இப்போது இதை ஜனங்கள் பார்த்துக்கொண்டிருப்பதை நான் அறிந்திருக்கிறேன், நாம் பேசயிருக்கும் காரியம், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? அவர்கள் சொல்கிறார்கள், “கம் ஆன்! அதாவது, ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறீர்கள், வரலாற்றில் உண்மை இருக்கிறதா?” நீங்கள் பத்திரிக்கைகளை பார்க்கும் போது நியூஸ்வீக் மற்றும் டைம் பத்திரிக்கைகள் ஆறு அல்லது எட்டு மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் - அதுபோல இதுவும் ஒன்று

“இயேசுவின் தரிசனங்கள்” எல்லா விதமான காரியங்களும் இந்த பத்திரிக்கைகளில் வெளிவருகிறது இவை தொடர்ந்து சொல்லும் ஒரு விஷயம், “ஒரு சில ஆதாரங்களே இருக்கிறது”. சரி, நீங்க உங்களுடைய பயணத்தில் ஒரு சிறிய புத்தகத்தை எழுதியிருக்கிறீர்கள் தி ஹிஸ்டாரிக்கள் ஜீசஸ் அதில் நீங்கள் சொல்லும்போது நீங்க மிக்கிகன் மாநிலத்தில் உங்களுடைய பிஹெச். டி நாட்களில் நடந்ததை, நீங்களே ஒரு நாத்திகனாக இருந்ததையும் உங்களை, இயேசுவை விசுவாசிக்கும்படி செய்த காரியத்தையும் கூறியிருக்கிறீர்கள். மேலும் இன்றைய காலத்தின் கடினமான தத்துவ மேதைகளும் ஒப்புக்கொள்ளும் 12 வரலாற்று உண்மைகளை நீங்கள் கூறியிருந்தீர்கள். அது என்னவென்று எங்களுக்கும் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். அதிலிருந்து துவங்கிடலாம்.

**ஹேபெர்மேஸ்:..**வெல், ஜான், சில முக்கியமானவைகளை முன்வைக்க விரும்புகிறேன்: இன்றைக்கு எல்லாருடைய எண்ணம் இயேசு சிலுவையில் அறையப்பட்டதால் மரித்தார் என்பதாகும். அதாவது, ஜான் கிரோசன் மற்றும் இயேசு கருத்தரங்கில் இடம்பெற்றவர்கள் கூறுகின்றனர் அதிகாலைமுதல் அறியப்பட்ட உண்மை இதுவாக தான் இருக்கிறதாம். அவர் அடக்கம்பண்ணப்பட்டார். இந்த காரியம், சீஷர்களில் சிலருக்கு அவநம்பிக்கையை உண்டாக்கிற்று. சரி, பெரும்பாலான மேதைகள் கல்லறை காலியாக இருந்ததை ஒப்புக்கொள்கிறார்கள் ஆனால் அதை மீதமுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. உண்மையில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் உயிரோடு எழுந்த இயேசுவை

தரிசித்த அனுபவத்தை சீர்ஷர்கள் விசுவாசித்தனர். அதன் விளைவாக அவர்கள் மாற்றம் பெற்றனர். உயிர்த்தெழுதல் தான் அவர்களுடைய செய்தியின் மையப்பொருளாக இருந்தது. அவர்கள் எருசலேமில் பிரசங்கித்தார்கள். சபை பிறந்தது. சில தனிநபர்கள் எழும்பினார்கள் யாக்கோபு பவுலை போல, 2 தீவிர நாத்திகர்கள் - ஒருவர் குடும்பத்திலேயே இருந்தார் - மற்றொருவர் கிறிஸ்தவர்களை உபத்திரவபடுத்தின வெளியால்- அவர்களும் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த அனுபவத்தை விசுவாசித்ததால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

இருந்தாலும், இன்றைக்கும் பல மேதைகள் எங்களுடைய கணிப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு வரலாற்று பதிப்பில் இயேசு என்ற அமைப்பை எங்களைவிட இன்னும் அதிக உண்மைகளை கண்டறிந்து நிலைபடுத்த பிரயாசிக்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** சரி, டோனி, ஹேபெர்மேசின் கருத்துக்களை பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

**டாக்டர் ஆன்டனி ப்ளூ:** வெல், அந்த உண்மைகளை நஅந் மறுக்கவில்லை  மாறாக நானும் ஆம் என்கிறேன், ஆனால். ஆதாரங்கள் நிருபிக்கப்படும் கட்டங்கள் பலவிதங்களில் அதிருப்தியை அளிக்கிறது. முதலாவதாக, எந்த ஆண்டில் இந்த சிலுவையில் அறையப்படுதலும் அதற்கு பின் நடந்த நிகழ்வுகளும் சம்பவித்ததென்று ஒருவருக்கும் தெரியாது. இது மறுக்கமுடியாத உண்மை பிறப்பின் நாள் ஒருவருக்குமே தெரியாது... வெல், தெரியாத பல பெரிய  மகான்களுடைய பிறந்த தேதி சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு குறைபாடு

என்னவென்றால், நம்முடைய ஆதாரங்கள் அனைத்தும் விசுவாசிகளான கிறிஸ்தவர்களால் எழுத்தப்பட்ட பதிப்புகள் மட்டுமே, அவர்கள் தங்களையே சாட்சிகளாக நிறுத்தவில்லை, எருசலேமில் இருந்த மற்ற யாருமே ஏன் அவர்கள் மனமாரவில்லை என்று சொல்ல முன்வரவில்லை அதோடு உண்மையில் பூமி அதிர்ச்சிகளும் மற்ற அற்புதங்களும் நடந்ததா இல்லையா என்று நமக்கு தெரியாது.

**ஆன்கர்பெர்க்:** அதை பற்றி என்ன நினைக்கிறீர்கள், கேரி?

**ஹேபெர்மேஸ்:**..வெல், சரி, இந்த ஆதிகால கிறிஸ்தவ எழுத்தாளர்கள் சாட்சிகளாக இல்லை என்று நீங்கள் சொல்லும்போது, அதில் பவுலை நீங்கள் சேர்க்கவில்லை என்று நம்புகிறேன், சரிதானே? அப்போஸ்தலனாகிய பவுல் சாட்சியாக இருந்தார் என நம்புகிறீர்களா?

**ப்ளூ:** ஓ, காஷ், ஆமா. நா சுவிசேஷத்தை எழுதியவர்களை பற்றி யோசித்தேன்.

**ஹேபெர்மேஸ்:**..ரைட். ஆனால் பவுல் தத்ரூபமான ஒரு சாட்சி. பவுலின் நிருபங்களை நீங்கள் அப்படியே ஏற்றுக்கொள்வீர்கள்.

**ப்ளூ:** நிச்சயமாக. ஓ, எஸ். ஆனா அவர் எருசலேமில் இல்லையே, அதாவது, அந்த நேரத்தில் இல்லை.

**ஹேபெர்மேஸ்:**..வெல், அதற்க்கு பிறகு வந்தார், அதாவது, ஸ்தேவான் கல்லெறியப்பட்ட போது அங்கிருந்தார். ஆனால் வேதாகமத்திற்கு புறம்பான பதிவுகளை நான் ஏற்கமாட்டேன்.

பெரும்பாலானவற்றிற்கு  வேதாகமத்தை விட அதிக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான் முன்வைத்த உண்மை என்று சொல்லப்படும் காரியங்களின் பட்டியலில், சீஷர்களின் அவநம்பிக்கை என்ற ஒரு விஷயத்தை தவிர - உளவியல் ரீதியில் அது சரியானது தான் - ஆனால் அதைத்தவிர மற்ற அனைத்தையும் பற்றி பவுல் எடுத்துரைக்கிறார். ஆனால் அதில் பெரும்பாலானவை ஆதிகால சாட்சிகளுடைய வேதத்தை விட அதிகமான தகவல் என நினைக்கிறேன்.

*****

**ஆன்கர்பெர்க்:** இப்போது நீங்கள் கேட்ட இந்த விவாதமானது கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும்  இடையிலான ஒரு கேள்வியின் விவாதம், “இயேசு உண்மையாக மரணத்திலிருந்து உயிர்த்தாரா?” கிறிஸ்தவரல்லாதவர் போதுமான வரலாற்று ஆதாரங்கள் இல்லை என்றிடுவார்கள், பார்த்த சாட்சியின் அறிக்கை இல்லை என்றிடுவர், இயேசு வாழ்ந்த காலத்திற்கு பிறகு அவரை அறியாதவர்களால் எழுதப்பட்டதுதான் சுவிசேஷம். அதோடு அவர்கள், சுவிஷேஷங்களில் சொல்லப்பட்டிருப்பது போல கிறிஸ்தவ மற்றும் உலக வரலாற்று பதிப்புகளில் இயேசுவை பற்றிய எந்த ஆதாரமும் இல்லை என்கின்றனர்.  அவர்களுடைய இறுதி கருத்து, “இயேசு அல்லவவு முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்தால், எப்படி அவர் பிறந்த தேதியும் அவர் சிலுவையில் அறையப்பட்ட தேதியும் நமக்கு தெரிவிக்கப்படாமல் இருக்கிறது?” இந்த கடைசி கேள்வியை பற்றி, நான் டாக்டர். டேரல் பாக்கிடம் பேசினேன், புதிய ஏற்ப்பாட்டின் விரிவுரையாளராக டாலாஸ் இறையியல் செமினரியில் இருக்கிறார். கேளுங்கள்.

பீட்டர் ஜென்னிங்க்ஸ் தன்னுடைய விசேஷித்த இயேசுவுக்கான ஆராய்ச்சி, ABC ஜூன் 2000 திறக்கும்போது, “நம்பத்தக்க காரியங்களை வெளிப்படுத்ஹ்றுவது மிகவும் கடினமான விஷயம் என எதிர்பார்க்கிறோம் என்றார். நம்பத்தக்க விஷயங்கள் வெளிப்படுவது கடினம் என்று கூறியதோடு அவர் வரலாற்றில் இயேசுவை பற்றி கூற இயேசுவின் வாழ்க்கையை குறித்த போதுமான ஆதாரங்கள் இல்லை என்றார். அது உண்மையா?

**பாக்:...**இல்ல. நிச்சயமா இல்ல. உண்மையில் சில வரலாற்று ரீதியான ஆதாரங்கள் இருக்கிறது, குறிப்பாக இயேசுவின் தோற்றம் ஒரு நிலையில் தெளிவற்ற நிலையில் இருக்கிறது. ரோம ராஜ்யத்தின் கிராமப்புறங்களில் தள்ளிவிடப்பட்டார் அந்த பறந்த ராஜ்யத்தின் கிராமப்புறத்தில் அவர் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவரை பற்றி ஏதாவது தெரிந்திருக்க வாய்ப்பிருந்ததாக தோன்றுகிறது. ஆனால் உண்மையில், அவர் பல இடங்களில் அறியப்பட்டிருந்தார்.

**ஆன்கர்பெர்க்:** பலருடைய கருத்துப்படி இயேசுவை பற்றி புதிய ஏற்ப்பாட்டில் கூறப்பட்டிருக்கும் வரலாற்று காரியங்களை நிருபிக்கும் எந்தவிதமான உலக பதிவுகளும் இல்லை என்கிறார்கள். அது உண்மையா பொய்யா?

**பாக்:...**இல்லை. அது போய். வேதத்திற்கு புறம்பாக இயேசு இருந்தார் என்பதற்கான பல ஆதாரங்கள் இருக்கிறது மேலும் அவையனைத்தும் இயேசுவை பற்றிய முக்கிய விஷயங்களை நமக்கு எடுத்துரைக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** அது என்ன?

**பாக்:...**பொந்தியு பிலாத்துதான் இயேசுவின் தண்டனைக்கு பொறுப்பாகிறார் என்று கூறும் டாசிடஸ் இருக்கிறார். ஒரு ரோம ஆளுனரை பற்றி கூறும் ஒரு ரோம வரலாற்றறிஞர். ஜோசெபஸ் இருக்கிறார், யூத வரலாற்றறிஞர், இயேசுவின் தண்டனைக்கு பொந்தியு பிலாத்து தான் பொறுப்பாகிறார் "எங்க மக்கள்" அதை மிரைவேற்றினர் என்கிறார். எனவே இந்த காரியத்தில் யூதர்களின் பங்கு இருப்பதை யூத வரலாற்று அறிஞ்ஞர்கள் கூறுகிறார்கள். யூதர்களின் கூற்றுப்படி இயேசு ஒரு மாயவித்தை காரராக குறிசொல்பவராக, அசாதரணமான கிரியைகளை நடப்பிக்கிறவராக பேசப்பட்டார். அதைதான் ஜோசெபசும் நமக்கு கூறுகிறார். எனவே நமக்கு உறுதியாக தெரிய வருவதோடு, சில விஷயங்களில் இருமடங்கு ஊர்ஜிதப்படுவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** இந்த கேள்வியை பொறுத்தவரை, "இயேசு எப்போது பிறந்தார்?" பல வரலாற்று அறிஞர்கள் இயேசு கி மு 4ஏப்ரலுக்கு முன்பு பிறந்தார் என்கின்றனர். ஏன்? மத்தேயு 2:1 மற்றும் லூக்கா 1:5 ஏரோது உயிரோடிருக்கும் போதுதான் இயேசு பிறந்ததாக நமக்கு கூறுகிறது. மத்தேயு 2:15ன்படி, இயேசு 2 வயதிற்கும் குறைவாக இருந்த போது ஏரோது மரித்திருக்கிறார். ரோமர்களுடைய பதிவுகளின் படி, ஏரோதின் மரணம் கி மு 4ல் சம்பவத்திருக்கும் என்று வரலாற்று நிபுணர்கள் கூறுகின்றனர். எதனால்? ஏரோது மரித்த ஆண்டின் சந்திர கிரகணத்தை ஜோசெபஸ் பதிவு செய்திருக்கிறார். அந்த கிரகணத்தின் நாளை வானியலாளர்கள் கணித்திருக்கிறார்கள் அது கி மு 4மார்ச் 12ம் தேதியை குறிக்கிறது. ஜோசெபஸ் கூறுகிறார் கி மு 4ல் ஏரோதின் மகனான அர்கேலியு ராஜாவாக பதவியேற்ற பிறகு தான் பஸ்கா ஆசரிக்கப்பட்டதாம். அந்த ஆண்டில் பஸ்கா ஏப்ரல் 17ம் தேதி அனுசரிக்கப்பட்டதென்பதை வரலாற்று நிபுணர்கள் அறிவார்கள். இந்த

காரியங்களை ஒன்றிணைத்து பார்க்கும்போது, இயேசு ஏரோதின் மரணத்திற்கு புன்பு பிறந்தபடியால், இயேசு கி மு 4 ஏப்ரலுக்கு முன்புதான் பிறந்திருப்பார் என்று ஆதாரங்கள் கூறுகிறது, அல்லது கி மு 5ற்கு சற்று முந்தைய நாட்களில் பிறந்திருப்பார்.

சரி, அடுத்த கேள்வியை பார்க்கும்போது, "இந்த நான்கு சுவிசேஷங்களும் எவ்வளவு துல்லியமாக இருக்கிறது அவை நேரில் கண்ட சாட்சிகளால் எளுதப்பட்டதுதானா?" நம்முடைய நிகழ்ச்சியின் ஒரு தொகுப்பை நீங்கள் பார்க்கும்படி விரும்புகிறேன் டாக்டர். ஜான் வார்விக் மோன்ட்கோமேரியுடனானது, 2 Ph.D. பட்டங்களை பெற்றவர் பயிற்சி விசாரணை வழக்கறிஞராக இருக்கிறார்.

*****

**டாக்டர் ஜான் மோன்ட்கோமேரி:** முதல் சுவிசேஷம் லேவியனான மத்தேயு எழுதியது, வரி வசூலிப்பவன், அப்போஸ்தலனாக மாறினான், இயேசுவின் சீடன், இயேசு சொன்னதை கேட்டு அவர் செய்ததை பார்த்து தன்னுடைய கருத்துப்படியாக எழுதியுள்ளார். நான்காவது சுவிசேஷத்தை எழுதியது யோவான் சீஷர்கள் எல்லாரிலும் சிறியவன் நீண்ட நாட்கள் உயிரோடிருந்தவன். அவர் சுமார் 95ம் ஆண்டில் எபேசு பட்டணத்தில் மரித்தார் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் இருக்கிறது. அவருடைய 2 சீடர்களின் பதிப்புகள் இருக்கிறது அவை யோவான் தான் இந்த புத்தகத்தின் ஆக்கியோன் என்பதை தெளிவுபடுத்துகிறது, மேலும் மற்ற முக்கிய சுவிசேஷங்களின் ஆக்கியோங்களை பற்றிய முக்கிய வல்களை அவர் ஹ சீடர்கள் மூலமாக தெரிவித்திருக்கிறார். இரண்டாவது சுவிசேஷத்தை யோவான் மாற்கு எழுதியுள்ளார் பேதுருவுடன் இருந்தவர்,

அப்போச்தலர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷத்தை எழுதியது ஒரு வைத்தியன் அவர் அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து மிஷினரி ஊழியங்களில் பங்குபெற்று வந்தார். மேலும் பவுலை பிரதானமான 11 அப்போஸ்தலர்களும் இவனுடைய தனிப்பட்ட அழைப்பில் அப்போஸ்தலனாக இருக்கிறான் என்பதை ஒப்புக்கொண்டனர்.

**ஆன்கர்பெர்க்:** அதோடு யாக்கோபும் பேதுருவும் இருக்கிறார்களே.

**மோன்ட்கோமேரி:** அவர்களும் இருக்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** அது சரிதான். எனவே நமக்கு 7 சாட்சிகள் இருக்கிறார்கள் அவர்கள் நேரடியாக பார்த்தார்கள் அல்லது மற்றவர்களிடமிருந்து நமக்கு தகவல்களை சேகரித்து கொடுத்ஹ்டிருக்கிரார்கள், அதைதான் நாம் புதிய ஏற்ப்பாட்டில் பெற்றிருக்கிறோம். ஆனா இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் அநேகர் சொல்லும் விஷயம் யெநக்கு கேட்கிறது, அதாவது அவர்கள், “இருந்தாலும் டாக்டர். மோன்ட்கோமேரி, அவர்கள் எல்லாரும் இயேசுவின் சீஷர்கள் தான்னு தெரியும். அவர்கள் அவருடைய நண்பர்கள். அவங்களுடைய சாட்சி செல்லுமா? அதாவது, அவங்க தங்களுடைய இஷ்டத்துக்கு யேசுவ உயர்வாக சொல்லியிருப்பாங்களோ? அவங்கள்ள யாருமே இறைநம்பிக்கையற்றவர்கள் அல்ல, இயேசுவினுடைய சிறந்த நண்பர்கள்தான் இருக்காங்க. இயேசு என்ன செய்தார் என்பதை பற்றின உண்மையைத்தான் அவர்கள் சொல்கிறார்கள் என்பதை எப்படி நம்ப முடியும்?

**மோன்ட்கோமேரி:** அதுதான் கேள்விகளின் மையப்பகுதியாக இருக்கிறது, அதை நேரடியாக பார்க்க வேண்டும் எனபது எனது கருத்து, அதை பற்றின 2 காரியங்களை கவனிக்க வேண்டும். முதலாவதாக, அவர்கள் விசுவாசிகளாக எதையும் துவங்கவில்லை. உண்மையில், இயேசு சிலுவையிலறையப்பட்ட பிறகு, அவர்கள் மறுபடியும் மீன் வலையை பிடித்துக்கொண்டு நின்றனர். அவர்கள் பிற்காலத்தில் எழுதிய காரியங்களின் ஆணித்தரமான உணர்வு அப்போது அவர்களிடம் காணப்படவில்லை. உயிர்த்தெழுதல் தான் அவர்களுடைய மனதை மாற்றியது. தோமாவின் விஷயத்தில் இதை பார்க்க முடியும், உயிர்த்தெழுதலுக்கு பிறகு இயேசுவின் ஆணி பாய்ந்த கரத்தையும் அவருடைய விலாவையும்  தொட்டு பார்க்கும் வரை அவரை விசுவாசியாமல் இருந்தான். அதுதான் முதல் காரியம்.

இரண்டாவது காரியம், இயேசுவை பற்றி எழுதுகிறவர் அல்லது மற்ற ஒருவரை பற்றி எழுதுகிறவர் அவர்களுடைய நண்பனாக இருப்பதால் எழுதுகிற காரியத்தில் எந்த வித்தியாசமும் இருக்காது, அவர் எழுதுகிற காரியங்களை அந்த சூழ்நிலையின் சாட்சியங்களை வைத்து எதினால் அது சரியானது தான். அதாவது ஆதி அப்போஸ்தலர்கள் இப்போது நமக்கு புதிய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை முதலில் யூதர்களுக்கே அறிவித்தனர், குறிப்பாக ஜெப ஆலயங்களில் போதித்தனர். யூத மத போதகர்கள் தான் முதன்முதலாக இயேசுவின் செய்தியை எதிர்ப்பவர்களாக இருந்தனர். சரி, ஒரு காரியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது சீஷர்கள், இயேசுவுடைய நண்பர்களோ இல்லையோ, அவர்கள் இயேசுவின் வாழ்வில்

அவரோடு இருந்தவர்களின் வார்த்தைகளை கேட்டு எந்தவித்தத்திலும் அவரை பற்றி எந்த தவறான தகவல்களையும் கொடுத்திருக்க எந்த வித வாய்ப்பும் இல்லை அதைதான் வக்கீல்கலாகிய நாங்கள் இந்த காரியத்தை கெடுக்க எந்த வழியும், நோக்கமும் சந்தர்ப்பமும் அவசியப்படவில்லை என்றிடுவோம்.

*****

**ஆன்கர்பெர்க்:** இயேசுவின் வாழ்வை குறித்த வரலாற்று ஆதாரங்களை பரிசோதித்து இயேசு உண்மையிலேயே மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதற்கான ஆதாரங்களை கண்டறிய முயலுகிறோம். நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், டாக்டர். கேரி ஹேபெர்மேஸ் இன்றைய மேதைகள் ஒப்புக்கொள்ளும் 12 வரலாற்று உண்மைகளை பற்றி தெளிவாக கூறினார்கள். அந்த உண்மைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள கேட்டுக்கொண்டேன்.

**ஹேபெர்மேஸ்:**..கிறிஸ்தவர்கள் சுவிசேஷம் என்று கூறும் காரியங்களை சுற்றியிருக்கும் நிகழ்வுகளை பெரும்பாலான மேதைகள் முன்வைத்திடுவார்கள்: உபத்திரவம், மரணம், அடக்கம், இயேசுவின் உயிர்த்தெழுதல். சுமார் 12 உண்மைகள் இருக்கும் என நினைக்கிறேன், குறைந்தது 12. அதாவது, அதிகப்படியான ஞானிகள் இதிலும் அதிகமானவற்றை சொல்ல முடியும், ஆனால் குறைந்த பட்சம் 12 உண்மைகளையாவது கடினமான மேதைகளும் ஒப்புக்கொள்கிறார்கள். உண்மையில் ஒவ்வொரு மேதையும் இந்த ஒவ்வொரு விஷயத்தையும் ஒப்புக்கொள்வார்கள்.

1. இயேசு சிலுவை மரணத்தால் மரித்தார்.

2. அடக்கம் பண்ணப்பட்டார். இதை பற்றி எந்த மாற்று கருத்துமில்லை. அநேகர் மரிக்கிறார்கள். அநேகர் அடக்கம் பண்ணப்படுகிறார்கள்.

3. அவருடைய மரணம் சீஷர்களுக்கு அவநம்பிக்கையை அளித்து பின்னடைய செய்தது, அவருடைய வாழ்க்கை முடிந்ததென்று நினைத்தனர். திடீரென்று உங்களுடைய நண்பன் மரித்துவிட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

4. இப்ப, இது பெரும்பாலும் நடக்காது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன், ஆனால் இயேசுவை வைத்திருந்த கல்லறையானது சில நாட்களுக்கு பிறகு வெறுமையாய் இருந்ததை பல மேதைகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

5. சீஷர்களுக்கு ஏற்ப்பட்ட அனுபவங்கள், இத விதத்தைதான் விமர்சகர்களும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதை கூற விரும்புகிறேன், அதாவது: உயிர்த்தெழுந்த இயேசுதான் தரிசனமானார் என்று நம்பத்தக்க விதமான சில அனுபவங்களை சீஷர்கள் பெறுகின்றனர். இயேசு அவர்களுக்கு காட்சியளித்ததாக நினைத்தனர்.

6. இந்த அனுபவங்களால், அவர்கள் (சீஷர்கள்) சந்தேகத்திலிருந்து மாற்றம் பெற்றார்கள் - அவர்களுடைய நிழலை கண்டு அவர்கள் பயந்தார்கள், பேச பயம், இயேசுவோடு தங்களை அடையாளப்படுத்திட அவர்கள் பயந்தார்கள் - அப்படியிருந்தவர்கள் தைரியமாக அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பிரசங்கித்தார்கள்.

7. இத செய்திதான் ஆதி திருச்சபையில் பிரசங்கத்தின் மையப்பொருளாக இருந்தது. பவுல் கூறியது நினைவிருக்கட்டும், “முதன்மையானது: (1 கொரி.15:3) இயேசுவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்.

8. இந்த செய்தியானது இயேசு  மரித்து அடக்கம் பண்ணப்பட்ட எருசலேமிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் விசேஷமாக பிரசங்கிக்கப்பட்டது.

9 இந்த பிரசங்கத்தின் விளைவாக, சபை பிறந்தது அது வளர ஆரம்பித்தது.

10. ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின் பிரதான நாளாக மாறினது. அது யூத விசுவாசிகளுக்கு முக்கியமானதாக இருந்தது.

11. யாக்கோபு, இறைனம்பிக்கையற்றவன், உயிர்த்தெழுந்த இயேசுவை தான் கண்டதை விசுவாசித்த பொது அவன் விசுவாசியாக மாறினான்.

12. சில வருடங்களுக்கு பிறகு, உயிர்த்தெழுந்த இயேசு தனக்கு தரிசனமானதை நம்பிய அவனும் அவனுடைய அனுபவத்தால் விசுவாசியாக மாறினான்.

நான் சொல்ல வருகிற காரியம் என்னவென்றால், காலியான கல்லறை என்ற ஒன்றை தவிர, இந்த காரியங்களை வரலாற்று நிகழ்வுகளாக விமர்சகர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள், அவர்களில் பெரும்பாலானோர் வெறுமையான கல்லறையையும் ஒப்புக்கொள்கிறார்கள். இதை பற்றி நான் எழுதியவற்றை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால் இவை தி ஹிஸ்டாரிக்கள் ஜீசஸ் என்ற புத்தகத்தில் உள்ளது மற்றவர்களும்

எழுதியிருக்கிறார்கள், இந்த காரியங்களை ஒப்புக்கொண்ட விமர்சகர்களின் பட்டியலை அதில் பார்க்க முடியும்.

சரி, நீங்கள் ஒருவேளை, “ஒரு நிமிடம் இருங்க. 12ஆ? அது பரவாயில்ல, ஆனா இத குறைக்க முடியுமான்னு கேட்கலாம். நாம் எதை தேர்வு செய்கிறோம் என்பதில் இன்னும் உன்னிப்பாக இருக்கும் இறைநம்பிக்கையற்றவர்கள் உள்ளனரா?

ஆல்ரைட். நான் முடிந்த அளவு இந்த பட்டியலை  குறைத்து நான்கு, ஐந்து, ஆறு ---- இதற்குள்ளாக சொல்கிறேன். இந்த பட்டியலை குறைக்க வேண்டும் என்றால், நான் இப்படிதான் சொல்ல வேண்டியிருக்கும்: இயேசு சிலுவை மரணத்தால் மரித்தார். உயிர்த்தெழுந்த இயேசுதான் இது என்று நம்பத்தக்க அனுபவங்களை சீஷர்கள் எதிர்கொண்டனர். அதினால் அவர்களுடைய வாழ்க்கை மாறினது, அதன் பிறகு, தர்ஷீஷை சேர்ந்த சவுல் இயேசுவின் தரிசனத்தை கண்டதினால் தான் மற்றம் பெற்றதை விசுவாசித்தான், தனிப்பட்ட தரிசனம், உயிர்த்தெழுந்த இயேசு தரிசனமானார்.

இது மொத்தம் நான்காக இருந்தாலும் இதுதான் அடிப்படையானதென்று சொல்லுவார்கள்.  இந்த நான்கு உண்மைகளை மையமாக வைத்து இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை பற்றி தெளிவாக சொல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** சரி, எல்லா விமர்சகராலும் ஏற்றுக்கொள்ளப்படும் மறுக்க முடியாத 12 உண்மைகள் இதுதான். சில நாத்திகர்கள் 20ற்கும் மேல் இருப்பதாக ஒப்புக்கொள்வார்கள். ஆனால் டாக்டர், ஹேபெர்மேஸ் இந்த 12 உண்மைகளில் நான்கு காரியங்கள் மட்டுமே உறுதியாக வரலாற்று பதிப்பில் இயேசு வாழ்ந்தார், சிலுவையில்

மரித்தார், மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை ஆணித்தரமாக சொல்லமுடியும் என்கிறார். ஏன் என்று  அவர் சொல்வதை கேளுங்கள்.

**ஹேபெர்மேஸ்:..**சரி, நான்கு காரியங்களை பட்டியலிட்டு கூறினேன் அதை பெரும்பாலான விமர்சகர்கள் மேதைகள் ஒப்புக்கொள்வார்கள் என்று கூறினேன், நடுவில் இருப்பவர்களும் இடதுபக்கத்தில் இருப்பவர்களும் ஏற்றுக்கொள்வார்கள். இதில் இன்னும் சிலவற்றை சேர்க்க முடியும்:ஆதிகால கிறிஸ்தவ செய்திகள் உயிர்த்தெழுதலை மையப்படுத்திதான் இருந்தது; இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபை போன்றவர்களை வைத்து என்ன செய்ய முடியும், கிறிஸ்துவிடம் வந்த ஒரு நாத்திகன். ஆதியிலேயே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பிரகடநிக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மைகளை வைத்து நீங்கள் என்ன செய்வீர்கள்?

சரி, என்னுடைய கருத்து இதுதான். சில விமர்சகர்கள் உங்களுக்கு பெரிய பட்டியலை கொடுப்பார்கள். சில நாத்திகர்கள் 20 என்றிடுவார்கள். நான் சொல்கிறேன், “எனக்கு 20 அவசியமில்லை. எனக்கு 12 போதும்.” சிலர் இப்படி யோசிக்கலாம், “12டை விட குறைவாக வைத்து ஏதாவது செய்ய முடியுமா?” நா சொல்லட்டுமா, “எங்கிட்ட நாலு, ஐந்து, ஆறு, ஏழு, சரியாக சொல்கிற அளவு இருக்கிறது.” அது தன்னிச்சையான எண்ணிக்கைதான். ஏன்? ஏன்னா யாருமே, உண்மையில் ஒருத்தர்கூட, இந்த உண்மைகளை மட்டும் சொல்லப்போவதில்லை. ஆனா நான் சொல்றேன் நானே தன்னிச்சையா இந்த பட்டியல 12ஆக குறைத்து, திலிருந்து, நாலு, அந்து, ஆறு. எனக்கு இதுவே போதுமானது. இந்த தகவல்களுடன் இந்த உண்மைகளை ஊர்ஜிதப்படுத்தும் தகவல்களை ஏற்றுக்கொள்ளும்படியாக, போதுமான அடித்தளம்  இருக்கிறது  இயேசு மரித்தார் மறுபடியும் அவர்

மரணத்திலிருந்து உயிர்த்தார். நீங்கள் இந்த உண்மைகளை நிதானித்து உங்களுக்கு ஏற்ற வித்தத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, அடுத்த வாரம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறித்த இன்னும் பல ஆதாரங்களை பற்றி பார்க்க இருக்கிறோம். உங்களிடம் ஒன்றை கேட்க்கிறேன், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்? அதினால் உங்களுக்கு என்ன நடக்கும்? மற்ற காரியங்களை காட்டிலும், இயேசு தம்மை பற்றி கூறியவை உண்மை எனபது நிருபனமாகும். அவர் தேவனுடைய குமாரன். அவர் பலருடைய பாவங்களுக்காக மரிக்கும் படி இந்த உலகிற்கு வந்தார், உங்களுடைய, என்னுடைய பாவங்களுக்கான பலியாக சிலுவையில் தொங்கி மரித்தார்.

இயேசுவின் வாழ்க்கையை பற்றிய உண்மைகளை அறிந்தபிறகு, அவர் தேவனுடைய குமாரன் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று அறிவாற்றலுடன் சொல்வது, அவரோடு உங்களுக்கு எந்த உறவையும் ஏற்படுத்தவோ உங்களுடைய பாவங்கள் பண்ணிக்கப்படவோ, நீங்கள் பரலோகம் செல்லவோ ஏதுவாயிருக்காது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நீங்கள் உங்களுடைய சகல நம்பிக்கையையும் உங்களில் இருந்து விளக்கி இயேசுவில் நம்பிக்கையை வைக்க நேர்ந்திடும். நீங்கள் ஒரு பாவி என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும், இந்த நிமிடத்திலிருந்து உங்களுடைய பாவங்களை மன்னிக்க வல்லவரான அவரை நம்போவதாக அவரிடம் சொல்லுங்கள், உங்களுக்கு நித்திய ஜீவனை ஈவாக அளித்து உங்கள் வாழ்வில் வந்து வாசம்பண்ண அவரை அழைத்திடுங்கள்.

நீங்கள் விரும்பினால், இப்போதே இயேசுவோடு ஒரு ஐக்கியத்திற்குள் நீங்கள் வர முடியும். அதை செய்ய விரும்புகிறீர்களா? அப்படினால், இந்த ஜெபத்தை என்னோடு சேர்ந்து செய்யும்படி உங்களை அழைக்கிறேன், “அன்பின் தேவனே, நீர் தேவனுடைய குமாரன் என்பதை நான் நம்புகிறேன். என்னுடைய பாவங்களுக்கு பலியாக நீர் சிலுவையில் மரித்தீர் என நம்புகிறேன். நீர் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயிர்த்து இன்றைக்கும் ஜீவனுள்ளவராக இருக்கிறீர். என்னுடைய வாழ்வில் உங்களை வரவேற்கிறேன். இந்த நிமிடத்திளிருந்து, உம்மை என் இரட்சகராக என் தெய்வமாக ஏற்றுக்கொள்கிறேன். உம்முடையவனாக என்னை ஏற்றுக்கொண்டதற்காக உமக்கு நன்றி. சரி, இந்த ஜெபத்தை நீங்கள் செய்திருந்தால், வேதம் கூறுகிறது, “அவருடைய நாமத்தை நோக்கி கூப்பிடுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” அதை தான் இன்று தேவன் உங்களுக்கு வாக்களிக்கிறார். உங்களை இரட்சித்திடுவார். ஒரு மனிதன் செய்யக்கூடிய சிறந்த ஜெபம் இதுதான்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.